பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி உயர்வு:

கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியின் பயனை மக்களுக்கு அளிக்க மறுப்பது ஏற்புடையது அல்ல!

தலைவர்கள் கண்டனம்!!

சென்னை, ஏப்.9

சிலிண்டர் விலை ரூ. 50 உயர்வு, பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி ரூ, 2 அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்ட செய்தியில் கூறியிருப்பதாவது:–

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி:

திமுக தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டுள்ளபடி, டீசல் விலையை ஏன் இது வரை குறைக்கவில்லை. காஸ் மானியம் மாதம் ரூ.100 கொடுப்பதாக சொன்ன வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றவில்லை. தேர்தலுக்கு முன் ஒரு பேச்சு தேர்தலுக்குப் பின் ஒரு பேச்சு என திமுக இரட்டை வேடம் போடுகிறது.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்:

சர்வதேசசந்தையில்கச்சா எண்ணெய் விலை ஏற்றம் என்ற வாதத்தை எடுத்து வைத்து விலை ஏற்றத்தை நியாயப்படுத்தும் மத்திய அரசு, விலை வீழ்ச்சி ஏற்படும்போது அதை மக்களுக்கு அளிக்காமல் இருப்பது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல.

மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம்:

சமையல் எரிவாயு விலை உயர்வு மூலம் சுமார் ரூ.7,000 கோடி அளவுக்கும், பெட்ரோல் மற்றும் டீசலுக்கான சிறப்பு கலால் வரியால் சுமார் ரூ.32,000 கோடி அளவுக்குமான சுமையை மத்திய பாஜக அரசு மக்கள் தலையில் சுமத்தியிருக்கிறது. இதற்கு எதிராக வலுவான கண்டன போராட்டங்களை கட்சிகள் நடத்தும்.

தா.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன்:

சர்வதேசசந்தையில்கச்சா எண்ணெய் விலை நிலவரத்தை பொறுத்து பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல் மற்றும் டீசல் விலையில் மாற்றம் கொண்டு வரும்போது மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை மத்திய அரசு கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்:

பன்னாட்டு சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தநிலையில், விலையைக் குறைப்பதற்குப் பதிலாக சிலிண்டர் விலை மற்றும் எரிவாயு மீதானகலால்வரிஉயர்த்தப்பட்டுள்ளது கொடுங்கோன்மை. தேர்தல் வாக்குறுதிப்படி ரூ.100 மானியத்தை திமுக அரசு வழங்கி பெண்களின் துயர் துடைக்க வேண்டும்.

தவெக தலைவர் விஜய்:

கச்சா எண்ணெய் விலை சரிவின் பயனை 'ஒருசிலர்' மட்டுமே அனுபவிக்க சலுகைகளை வழங்கி வரும் மத்திய அரசுக்கு தேர்தல் நேரத்தில் மட்டும்தான் மக்கள் மீது கரிசனம் வருமா, சிலிண்டருக்கு ரூ.100 மானியம் வழங்குவதாக திமுக வாக்குறுதி அளித்தது. இவ்வாறு மக்களை ஏமாற்றி, வாட்டி வதைப்பதில் மத்திய பாஜக அரசும், திமுக அரசும் இணைந்த கைகளாகவும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகவும் செயல்படுகின்றன.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்டகாலாங்கரை கிராமத்தில் இருந்து அத்திமரப்பட்டி செல்லும் சாலைக்கு இடையே வீரநாயக்கன்தட்டு கிராமத்துக்கு பிரிந்து செல்லும் இணைப்பு சாலை மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமாக காணப்படுகிறது. இதனால் அவ்வழியே வாகனங்களில் செல்வோர் அதிகம் சிரமப்பட்டு வருகின்றனர்.

உங்களுக்கு நீதி கிடைக்கும்; நான் மீண்டும் வங்கதேசம் வருவேன்!

ஹசீனா தகவல்!!

புதுடெல்லி, ஏப்.9

நான் மீண்டும் வங்கதேசம் வருவேன் என தனது கட்சி நிர்வாகிகளிடம் முன்னாள் பிரதமர் ஹசீனா தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தில் பிரதமராக பதவி வகித்த அவாமி லீக் கட்சியின் தலைவர் ஷேக் ஹசீனாவுக்கு (77) எதிரான போராட்டம் தீவிரம் டைந்தது. இதையடுத்து, கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி பதவியை ராஜினாமா செய்த ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்தார். அங்கு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், தனது கட்சியின் முக்கிய நிர்வாகிகளின் குடும்ப த்தினருடன் சமூக வலைதளம் மூலம் ஹசீனா கலந்துரையாடினார். அப்போது அவர் கூறியதாவது: வங்கதேச மக்கள் மீது அக்கறை இல்லாதவர் இப்போது இடைக்கால அரசை வழிநடத்துகிறார்.

முன்பு சிறிய தொகையை மக்களுக்குகடனாககொடுத்து அதிக வட்டி வசூலித்தார். இதன்மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு வெளிநாட்டில் ஆடம்பரமாக வசித்தார்.

அப்போது அவருடைய ஏமாற்று வேலையை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, அவருக்கு அரசு நிறைய உதவி செய்தது. ஆனால் மக்கள் பலனடையவில்லை. அவர் தனக்கு நல்லவற்றை செய்துகொண்டார். அப்போது அவருக்கு உருவான அதிகார மோகத்தால் இப்போது வங்கதேசம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. வளர்ச்சிக்கான மாதிரியாக விளங்கிய வங்கதேசத்தை அவர் தீவிரவாதிகளின் தேசமாக மாற்றிவிட்டார். நம்முடைய கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் விவரிக்க முடியாத வகையில் கொல்லப்படுகிறார்கள். நம் கட்சிக்கு ஆதரவாக செயல்படும் காவலர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் அடக்கு முறைக்கு உள்ளாகிறார்கள்.

வங்கதேசத்தில் நடக்கும் பாலியல் குற்றங்கள், கொலை, வழிப்பறி உள்ளிட்ட செயல்கள் பற்றிய செய்திகள் வெளியில் வருவதில்லை. அவ்வாறு மீறி வெளியிடப்பட்டால் சம்பந்தப்பட்ட ஊடகங்கள் மிரட்டலுக்கு உள்ளாகின்றன.

இதையெல்லாம்அல்லாசகித்துக் கொள்ள மாட்டார். உங்களுக்கு நீதி கிடைக்கும். குற்றச் செயலில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவார்கள்.

இது என்னுடைய வாக்குறுதி. நான் மீண்டும் வங்கதேசம் வருவேன். அதற்காகத்தான் அல்லா என்னை உயிருடன் வைத்திருக்கிறார் என்று கருதுகிறேன். இவ்வாறு ஹசீனா தெரிவித்தார்.

காற்று, சூரிய மின் உற்பத்தியில் 3ம் இடத்துக்கு இந்தியா முன்னேற்றம்!

புதுடெல்லி:ஏப்.9–

பிரிட்டனை சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பான எம்பர், சுற்றுச்சூழலுக்கு மாசு இல்லாத எரிசக்தி உற்பத்தி குறித்து ஆண்டுதோறும் ஆய்வு நடத்தி விரிவான அறிக்கையை வெளியிட்டு வருகிறது. இதன்படி எம்பர் அமைப்பின் ஆய்வறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது: உலகம் முழுவதும் 215 நாடுகளின் மின் உற்பத்தி குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. இதன்படி கடந்த ஆண்டு சர்வதேச அளவிலான மின் உற்பத்தியில் 41 சதவீத மின்சாரம் அணு சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைகளில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இதன்படி சர்வதேச அளவில் நீர்மின் நிலையங்கள் மூலம் 14%, அணு சக்தி மூலம் 9%, காற்றாலைகள் மூலம் 8%, சூரிய மின் கட்டமைப்புகள் மூலம் 7%, இதர புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் 3% மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அதிக அளவில் மின்சாரத்தை பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தில் இருக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ரஷ்யா, ஜப்பான், பிரேசில் நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. சர்வதேச அளவிலான காற்று, சூரிய மின் உற்பத்தியில் சீனா முதலிடத்தில் இருக்கிறது. சீனாவின் மொத்த உற்பத்தியில் 82 சதவீத மின்சாரம், காற்றாலை, சூரிய மின் கட்டமைப்புகள், நீர் மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த நாட்டில் நிலக்கரி மூலம் 18% மின் சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவின் சூரிய மின் உற்பத்தி, காற்றாலை மின் உற்பத்தி கடந்த 5 ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளது. சர்வதேச அளவிலான காற்று, சூரிய சக்தி மின் உற்பத்தியில் ஜெர்மனியை பின்னுக்கு தள்ளி 3ம் இடத்துக்கு இந்தியா முன்னேறி உள்ளது. இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் 78% நிலக்கரி உள்ளிட்ட புதைபடிமங்களில் இருந்து உற்பத்தி செய்யப் படுகிறது. மீதமுள்ள 22% காற்றாலைகள், சூரிய மின் கட்டமைப்புகள், அணு மின் நிலையங்கள் உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் உற்பத்தி செய்யப் படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

புஞ்சைபுளியம்பட்டிகாரப்பள்ளம்சோதனைசாவடிஅருகேகாட்டெருமைகள்கூட்டமாக சாலையை கடந்து சென்ற காட்சி. இதனால் அந்த சாலையில் போக்குவரத்து பாதித்தது.

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலக சிறு கூட்டரங்கில் சட்ட ஒழுங்கு குறித்த கலந்தாய்வு கூட்டம் கலெக்டர் அழகுமீனா தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உட்பட பலர் உள்ளனர்.

கூட்டுறவு சங்கங்கள் மூலம்

ரூ.1.10 லட்சம் கோடி கடன் வழங்கப்படும்!

அமைச்சர் பெரியகருப்பன் அறிவிப்பு!!

சென்னை, ஏப்.9.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் இந்த ஆண்டு ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் கோடி கடன் வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் நேற்று பேசினர். அதற்கு அத்துறையின் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதில் அளித்துப் பேசியதாவது:

தமிழகம் 9.69 சதவீத வளர்ச்சியுடன் பொருளாதாரத்தில் புதிய உச்சத்தை பதிவு செய்து, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இதில் கூட்டுறவுத் துறைக்கும் பங்கு உண்டு என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். தமிழகம் முழுவதும் இயங்கி வரும் 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் லாபத்தில் இயங்கி வருகின்றன. அவ்வங்கிகளின் நிகர லாபம் ரூ.304 கோடி ஆகும்.

கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக கடந்த ஆண்டு 18 லட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.16,410 கோடி பயிர்க்கடன் வழங்கப்படுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த பயிர்க்கடன் ரூ.55,686 கோடி ஆகும்.

உழவர் கடன் அட்டை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு ரூ.3 லட்சம் வரை குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. கடனை உரிய காலத்துக்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித் தொகை முழுவதையும் அரசே செலுத்துகிறது. இத்திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு ரூ.6,660 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 12 லட்சத்து 41 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

கூட்டுறவு அமைப்புகளில் தகுதியுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 59 லட்சம் பேர். அவர்களில் ஆதார் மற்றும் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்ட உறுப்பினர்கள் என்று பார்த்தால் 97 லட்சத்து 83 ஆயிரம் பேர் உள்ளனர். எஞ்சியவர்களிடம் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தேவையான விவரங்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்ததும் கூட்டுறவு சங்க தேர்தல் ஜனநாயக முறைப்படி நடத்தப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் அமைச்சர் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் வருமாறு: அனைத்துவகைகூட்டுறவு சங்கங்கள் வாயிலாக பல்வேறு திட்டங்களின் மூலம் இந்த ஆண்டு ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி அளவுக்கு கடன் வழங்கப்படும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பயிர்க் கடனுக்கு விண்ணப்பித்த உடனே கடன் வழங்கப்படும்.

நிலமற்ற ஏழை பெண் விவசாய தொழிலாளர்கள் 2 ஏக்கர் வரை விவசாய நிலம் வாங்குவதற்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.5 லட்சம் வரை கடன் வழங்கப்படும், பொருளாதாரத்தில் பின்தங்கிய 1,000 மகளிருக்கு மின்சார ஆட்டோ வாங்க தலா ரூ.3 லட்சம் வரை கடன் வழங்கப்படும்.

கூட்டுறவு வங்கிகளில் இணையவழியில் சேமிப்பு கணக்கு தொடங்கும் வசதி, இணையவழியில் பல்வேறு கடன்களை பெறும் வசதி, கிரெடிட் கார்டு பெறுவது போன்ற சேவைகள் வழங்கப்படும்.

கூட்டுறவு பண்டக சாலைகளில் இருந்து பொருட்களை வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று விநியோகம் செய்யும் வகையில் விரைவு வணிக முறை செயல்படுத்தப்படும்.

சென்னை தீவுத்திடலில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் கட்டப்படும். இவ்வாறு அமைச்சர் அறிவித்தார்.

சிவாஜி கணேசன் இல்லத்தில் எனக்கு உரிமை இல்லை!

பிரமாண பத்திரம் தாக்கல் செய்த ராம்குமார்!!

சென்னை, ஏப்.9:

நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டில் தனக்கு எந்த உரிமையும் இல்லை என பிரபுவின் அண்ணன் ராம்குமார் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

நடிகர் சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமார் மற்றும் இளைய மகன் நடிகர் பிரபு. சிவாஜி கணேசன் காலமான நிலையில் சென்னை தியாகராய நகரில் உள்ள அன்னை இல்லத்தில்நடிகர்பிரபுகுடும்பத்துடன் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், ஜகஜால கில்லாடி என்ற திரைப்படதயாரிப்புக்காக சிவாஜி கணேசனின் பேரனும் ராம்குமாரின் மகனுமான துஷ்யந்த் பெற்ற கடன் வட்டியுடன் சேர்த்து ரூ.9 கோடியே 39 லட்சத்தை திருப்பித் தரக் கோரியவழக்கில், சிவாஜிகணேசனின் அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி, நடிகர் பிரபு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்திருந்தார்.அந்தமனுவில், எனது பெயரில் அன்னை இல்லம் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் சகோதரர் ராம்குமாருக்கு எந்த உரிமையும் இல்லாததால், வீட்டை ஜப்தி செய்ய பிறப்பித்த உத்தரவை நீக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்த போது, துஷ்யந்தின் தந்தை ராம்குமார் தரப்பில், அன்னை இல்லத்தின் மீது தனக்கு எந்த உரிமையும், பங்கும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பிரமாண பத்திரத்தை தாக்கல்செய்யராம்குமார்தரப்புக்கு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அன்னை இல்லத்தை தனது சகோதரர் பிரபுவுக்கு தனது தந்தை சிவாஜி கணேசன் உயில் எழுதி வைத்துள்ளதாகவும், அந்த வீட்டின் மீது தனக்கு தற்போது எந்த உரிமையும், எந்தப் பங்கும் இல்லை எனவும் கூறி, ராம்குமார் தரப்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, பிரபு மற்றும் தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. வாதங்கள் முடிவடையாததால் விசாரணையை ஏப்.15க்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழ் கற்றதனால் நான் தமிழ் பேசவில்லை

தமிழ் என்னைப் பெற்றதனால் நான் நற்றமிழ் பேசுகிறேன்!

தந்தைக்கு கண்ணீர் மல்க தமிழிசை இரங்கல்

சென்னை, ஏப்.09

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் மறைவுக்கு அவரது மகளும் பா.ஜ.க. மூத்த தலைவருமான டாக்டர். தமிழிசை சவுந்தரராஜன் கண்ணீர் மல்க தெரிவித்துள்ள இரங்கல் வருமாறு:–

தமிழ் கற்றதனால் நான் தமிழ் பேசவில்லை... தமிழ் என்னைப் பெற்றதனால் நான் நற்றமிழ் பேசுகிறேன் என்று.... பெருமையாக. பேசவைத்த என் தந்தை குமரி அனந்தன் இன்று என் அம்மாவோடு.. இரண்டறக் கலந்து விட்டார்... குமரியில்.. ஒரு கிராமத்தில் பிறந்து.. தன் முழு முயற்சியினால்... அப்பழுக்கற்ற அரசியல்வாதியாக... தமிழ் மீது.. தீராத பற்று கொண்டு... தமிழிசை என்ற பெயர் வைத்து... இசை இசை... என்று கூப்பிடும் என் அப்பாவின்... கணீர் குரல்... இன்று காற்றில்.. இசையோடு கலந்து விட்டது.... வாழ்க்கை இப்படித்தான் வாழ வேண்டும் என்று... சீரான வாழ்க்கை வாழ்ந்தவர்... இன்று தான் வளர்த்தவர்கள் எல்லாம்... சீராக வாழ்வதைக் கண்டு... பெருமைப்பட்டு.. வாழ்த்திவிட்டு.. எங்களை விட்டு மறைந்திருக்கிறார்... என்றும். .. அவர் பெயர் நிலைத்திருக்கும். தமிழக அரசியலில்.. பாராளுமன்றத்தில் முதன் முதலில் தமிழில் பேசியவர் இன்று தமிழோடு காற்றில் கலந்துவிட்டார் என்று சொல்ல வேண்டும்.... மகிழ்ச்சியோடு போய் வாருங்கள் அப்பா... நீங்கள் மக்களுக்கு என்ன எல்லாம் செய்ய வேண்டும் என்று நினைத்தீர்களோ... அதை மனதில் கொண்டு... உங்கள் பெயரில்... நாங்கள் செய்வோம் என்று... உறுதியோடு... உங்களை வழி அனுப்புகிறோம்... உங்கள் வழி உங்கள் வழியில்..... நீங்கள் எப்பொழுதும் சொல்வதைப் போல... நாமும் மகிழ்ச்சியாக இருந்து.. மற்றவர்களின் மகிழ்விக்க வேண்டும்.. என்று உங்கள் ஆசை ஆசையை.. எப்போதும் நிறை வேற்று வோம்...

போய் வாருங்கள் அப்பா தமிழ் கற்றதனால் நான் தமிழ் பேசவில்லை தமிழ் என்னைப் பெற்றதனால் நான் தமிழ் பேசுகிறேன்...

நன்றி அப்பா.. மகிழ்ச்சியோடு போய் வாருங்கள்....

இவ்வாறு டாக்டர். தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

VTM விமிலபுரி

பதிவு அலுவலகம்: கழுக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்)நிபந்தனைகள் 29 மற்றும் 47 க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 16.04.2025 புதன்கிழமை மாலை 04.30 மணிக்கு காணொளி மாநாடு மூலம் நடைபெறும். இது இருப்புக்களை மூலதனமாக்குவதற்காக AOA-ன் திருத்தங்களை பரிசீலித்து அங்கீகரிக்கவும், போனஸ் பங்குகளை வெளியிடுவதற்கான முன்மொழிவை பரிசீலித்து அங்கீகரிக்கவும். தேவைப்பட்டால் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிக்க ஒப்புதல் அளிக்கவும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.

இடம்: கழுக்கரை, விருதுநகர். VTM லிமிடெட்டிற்காக,
நாள்: 07.04.2025 கா.பிரியதர்ஷினி
கம்பெனி செயலாளர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஆன்மிக - பண்பாட்டு இதழ் ஏப்ரல் 2025

- கருணைப் பெருங்கடல் ஸ்ரீராமகிருஷ்ணர்
- ஸ்ரீமத் ராமாயணம் என்னும் சரணாகதி வேதம்
- தாய்நாட்டை நேசித்த மாபெரும் துறவி - நீதியரசர் ஸ்ரீராம்
- சித்திரைப் பெண்ணே வருக... - டாக்டர் சுதா சேஷய்யன்
- வேத ரகசியங்கள் 4: உடலை இயக்கும் சக்திகள் - மாலன்
- கம்பர் ஓர் அறிவியலாளர் ❖ அக்ஷய திருதியை
- கும்பமேளாவைப் பற்றி ஓர் எழுத்தாளர்
- மஹாவீரரும் சமண மதமும்

தனிப்பிரதி விலை ரூ. 20/- ஆண்டுச் சந்தா ரூ. 220/-

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4.
✆: 93456 63015 ☎ : (044) 2462 1110 Extn: 215
e-mail: magazine@chennaimath.org, website:www.chennaimath.org

இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு தென்னழகர் திருக்கோயில்
கோவில்குளம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

மின்னணு–ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.1/2025 நாள்: 07.04.2025

அருள்மிகு தென்னழகர் திருக்கோயில், கோவில்குளம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம். கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு செயல் அலுவலர், அருள்மிகு தென்னழகர் திருக்கோயில், கோவில்குளம் அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம். அலுவலகத்தில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவேற்க்கப்படுகிறது.

வேலையின் பெயர்: அருள்மிகு தென்னழகர் திருக்கோயில் கோவில்குளம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணி.	
பணியின் தோராய மதிப்பு : ரூ.1,39,01,455/- (GST உள்பட)	
முன் வைப்புத் தொகை: ரூ.80,000/-	பணிமுடிக்க வேண்டிய காலம்: 6 மாதங்கள்

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் படிவம் இணையதளத்தில் கிடைக்கும்நாள் : 15.04.2025 முதல் 29.04.2025 பிற்பகல் 2.00 மணி வரை, மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கக்கடைசி நாள் மற்றும் நேரம் : 29.04.2025 பிற்பகல் 02.00 மணி வரை, மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள்திறக்கப்படும்நாள்மற்றும்நேரம் : 29.04.2025 பிற்பகல் 04.00 மணிக்கு, ஒப்பந்தக்காரரின்தகுதி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களால் அரசு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஸ்தபதிகள் / சிற்பிகள் ஒப்பந்தப்புள்ளி கோர தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். பதிவுச்சான்று நடப்பில் உள்ளதற்கான சான்று GST வரி சான்று கடந்த மாதம் GST கட்டியதற்கான சான்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்யவேண்டிய : https ://tntenders.gov.in இணையதள விவரம்.

M.சண்முகஜோதி, தக்கார் D.ஜெயந்தி, செயல் அலுவலர்
அருள்மிகு தென்னழகர் திருக்கோயில் செ.ம.தொ.இ / 1428 / ஒப்பந்தப்புள்ளி / 2025 அருள்மிகு தென்னழகர் திருக்கோயில்

தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத் துறை
அருள்மிகு மார்க்கசகாயசுவாமி திருக்கோயில்
மூவலூர், மயிலாடுதுறை வட்டம், (மு) மாவட்டம்

இணைய வழி - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 01/2025 / ஒப்பந்த வகை: விலை விகிதமுறை / நாள்: 08.04.2025

மயிலாடுதுறை மாவட்டம் (மு) வட்டம், மூவலூர், அருள்மிகு மார்க்கசகாயசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் அவர்கள் திருக்கோயில்களில் திருப்பணிக்கு தமிழ்நாடு அரசுதுறைகளில் பதிவு பெற்ற, நடப்பில் உள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி / சிற்பி/பி.மிகுந்து தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (https://tntenders.gov.in)-மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வேலையின் பெயர்	பணியின் தோராய மதிப்பு ரூ.	முன் வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் தகுதி	முன்வைப்புத் தொகை செலுத்தும் விபரம்
அருள்மிகு மார்க்கசகாயசுவாமி திருக்கோயில் பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி	ரூ. 1,14,94,966/-	ரூ. 67,500/-	12 மாதங்கள்	தமிழ்நாடு அரசுதுறைகளில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி / சிற்பி	செயல் அலுவலர், அருள்மிகு மார்க்கசகாயசுவாமி திருக்கோயில், மூவலூர், மயிலாடுதுறை வட்டம் (இணையதளம் மூலமாக)

1.ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப் பெறும் நாள் மற்றும் நேரம் : 11.04.2025 முதல் 29.04.2025 பிற்பகல் 5.30 மணி வரை
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 30.04.2025 மு.ப 11.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.04.2025 மு.ப 12.00 மணி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் அன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும். மேலும் இது விபரங்களை இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் (https://tntenders.gov.in) -ல் மட்டுமே பெறவேண்டும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.

செயல்அலுவலர்
அயி மார்க்கசகாயசுவாமி திருக்கோயில், மூவலூர், மயிலாடுதுறை வட்டம்.

செ.ம.தொ.இ / 1423 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடுஅரசு / இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு திருவேங்கடநயினார் திருக்கோயில்
ஆலச்சூடி, கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.
இணையதள – ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு: 01/நாள்: 08.04.2025

அருள்மிகு திருவேங்கடநயினார் திருக்கோயில் ஆலச்சூடி, கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம், செயல் அலுவலர் அவர்கள் திருக்கோவிலின் கீழ்காணும் பணிக்கு தமிழ்நாடு அரசு மற்றும், அரசுத்துறைகளில் பதிவுபெற்ற, நடப்பில் உள்ள, தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (https://tntenders.gov.in) - மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் பெயர்	ஒப்பந்தத்தொகை (Including GST) ரூ.	முன் வைப்புத் தொகை	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் தகுதி
1	அருள்மிகு திருவேங்கட நயினார் திருக்கோயில், ஆலச்சூடி, கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம். திருக்கோயில் திரும்ப கட்டும் பணி	₹13928806	₹80000	9 மாதங்கள்	இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களால் அரசு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஸ்தபதிகள் / சிற்பிகள் ஒப்பந்தப்புள்ளி கோர தகுதி உள்ளவர்